நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு

வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். சிசி. 268 / 2021

வழக்கு சாட்சி- **அ.சா.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | அழகர் | : | ஜாதி | |
| தந்தை பெயர் | பழனிராஜ் | : | தொழில் | விவசாயம் |
| கிராமம் | அலமேலுபுரம் பூண்டி | : | சமயம் | |
| தாலுக்கா | திருவையாறு | : | வயது | 75/2023 |

(எதிரி ஆஜர் )

**நாள் : 05.06.2023**

**முதல் விசாரணை:**

**1)** நான் திருவையாறு தாலூக்கா அலமேலுபுரம் பூண்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன்.ஆஜர் எதிரியை தெரியும். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன பிரசன்னா என்பவரை தெரியும். கடந்த 07.08.2021 ஆம் தேதியன்று காலை 10.00 மணி அளவில் நானும், எனது மகனும் நெல் அரைப்பதற்காக புதுச்சத்திரம் சென்றுகொண்டிருந்தபோது எங்களுக்கு முன்பாக இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன பிரசன்னா என்பவர் இரு சக்கர வாகனத்தில் அலுமேலுபுரம்பூண்டியிலிருந்து திருக்காட்டுப்பள்ளிக்கு சென்று கொண்டிருந்தார். எதிரி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வரும் பாலத்தில் வந்து மேற்கு திசையை நோக்கி திரும்பும்போது எதிர் திசையில் இரு சக்கர வாகனத்தில் வந்த பிரசன்னா என்பவரை கவனிக்காமல் அவர்மீது மோதிவிட்டார். உடனே நாங்கள் இறங்கி அருகில் சென்று பார்த்தோம், பிரசன்னாவிற்கு கை, கால், முகத்தில் அடிபட்டிருந்தது. பிரசன்னாவை 108 ஆம்புலன்ஸ்மூலம் திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்ற பிறகு மேல் சிகிச்சைக்காக திருச்சி பிரண்ட்லைன் மருந்துதுவமனைக்கு அழைத்து சென்றோம். அதன்பிறகு அவர் இறந்துவிட்டதாக விசாரித்து தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை

**(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு **)**